## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
# திருவாய்மொழி 10-6 - அருள் பெறுவார்
**(காமுகன் காமினியின் அழுக்குகப்பது போலே, எம்பெருமான் ஆழ்வாரது ப்ராக்ருத சரீரத்தை உகந்து, அவ்வுடம்புடன் அவரைப் பரமபதம் அழைத்துச் செல்ல அவரது இசைவு பார்த்திருந்தமையைக் கூறுதல்)**

3722 * அருள் பெறுவார் அடியார் * தம் அடியனேற்கு * ஆழியான்
அருள் தருவான் அமைகின்றான் * அது நமது விதிவகையே **
இருள் தருமா ஞாலத்துள் * இனிப் பிறவி யான் வேண்டேன் *
மருளொழி நீ மடநெஞ்சே! * வாட்டாற்றான் அடி வணங்கே 1

3723 வாட்டாற்றான் அடி வணங்கி * மாஞாலப் பிறப்பறுப்பான் *
கேட்டாயே மடநெஞ்சே! * கேசவன் எம்பெருமானை **
பாட்டாய பல பாடிப் * பழவினைகள் பற்றறுத்து *
நாட்டாரோடு இயல்வொழிந்து * நாரணனை நண்ணினமே 2

3724 நண்ணினம் நாரணனை * நாமங்கள் பல சொல்லி *
மண்ணுலகில் வளம் மிக்க * வாட்டாற்றான் வந்து இன்று **
விண்ணுலகம் தருவானாய் * விரைகின்றான் விதிவகையே *
எண்ணினவாறாகா * இக்கருமங்கள் என் நெஞ்சே! 3

3725 என் நெஞ்சத்துள் இருந்து * இங்கு இருந்தமிழ் நூல் இவை மொழிந்து *
வன்னெஞ்சத்து இரணியனை * மார்விடந்த வாட்டாற்றான் **
மன்னஞ்சப்[1] பாரதத்துப் * பாண்டவர்க்காப் படை தொட்டான் *
நல்நெஞ்சே! நம்பெருமான் * நமக்கருள் தான் செய்வானே 4

3726 வானேற வழி தந்த * வாட்டாற்றான் பணிவகையே *
நானேறப் பெறுகின்றேன் * நரகத்தை நகு நெஞ்சே! **
தேனேறு மலர்த் துளவம் * திகழ் பாதன்[2] செழும்பறவை *
தானேறித் திரிவான * தாளிணை[3] என் தலை மேலே 5

3727 தலை மேல தாளிணைகள் * தாமரைக்கண் என்னம்மான் *
நிலை பேரான் என் நெஞ்சத்து * எப்பொழுதும் எம்பெருமான் **
மலைமாடத்து அரவணை மேல் * வாட்டாற்றான் மதம் மிக்க *
கொலை யானை மருப்பொசித்தான் * குரைகழல்கள் குறுகினமே 6

3728 குரைகழல்கள் குறுகினம் * நம் கோவிந்தன் குடி கொண்டான் *
திரைகுழுவு கடல்புடை சூழ் * தென்னாட்டுத் திலதம் அன்ன **
வரைகுழுவு மணிமாட * வாட்டாற்றான் மலரடி மேல் *

[1] மன்னெஞ்ச
[2] பாதம்
[3] திரிவானத் தாளிணை / திரிவான் தன் தாளிணை

விரைகுழுவு நறுந்துளவம் * மெய்ந்நின்று கமழுமே 7

3729 மெய்ந்நின்று கமழ் துளவ * விரையேறு திருமுடியன் *
கைந்நின்ற சக்கரத்தன் * கருதுமிடம் பொருது புனல் **
மைந்நின்ற வரை போலும் * திருவுருவ வாட்டாற்றாற்கு *
எந்நன்றி செய்தேனா * என் நெஞ்சில் திகழ்வதுவே? 8

3730 திகழ்கின்ற திருமார்பில் * திருமங்கை தன்னோடும் *
திகழ்கின்ற திருமாலார் * சேர்விடம் தண்வாட்டாறு **
புகழ்கின்ற புள்ளூர்தி * போரரக்கர் குலம் கெடுத்தான் *
இகழ்வின்றி என் நெஞ்சத்து * எப்பொழுதும் பிரியானே 9

3731 பிரியாது ஆட்செய் என்று * பிறப்பறுத்து ஆளறக் கொண்டான் *
அரியாகி இரணியனை * ஆகம் கீண்டான் அன்று **
பெரியார்க்கு ஆட்பட்டக்கால் * பெறாத பயன் பெறுமாறு *
வரிவாள்வாய் அரவணை மேல் * வாட்டாற்றான் காட்டினனே 10

3732 * காட்டித் தன் கனைகழல்கள் * கடுநரகம் புகல் ஒழித்த *
வாட்டாற்று எம்பெருமானை * வளங்குருகூர்ச் சடகோபன் **
பாட்டாய தமிழ் மாலை * ஆயிரத்துள் இப்பத்தும்
கேட்டு * ஆரார் வானவர்கள் * செவிக்கினிய செஞ்சொல்லே 11

**அடிவரவு:** அருள் வாட்டாறு நண்ணி என் வானே தலை குரை மெய் திகழ்
பிரியாது காட்டி செஞ்சொல்